**போரதீவுப் பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு**

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 05 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் திகதியன்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆம் ஆண்டு ஜுன் 19 ஆம் திகதியன்றும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் போரதீவுப் பற்று பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண திறைசேரி திணைக்களத்திடமிருந்து அறவிடப்படவேண்டிய முத்திரை தீர்வையானது ரூபா 6,986,412 தொகையாக கணிக்கப்பட்டுள்ள போதிலும், நிதிக்கூற்றுக்களில் நிலுவை முத்திரை தீர்வையாக இத்தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய வருமானம் கணக்கிடல் வேண்டும். | முத்திரைத் தீர்வையாக கணிக்கப்பட்டுள்ள ரூபா 6,986,412 தவறுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான முத்திரை தீர்வையானது ரூபா 7,523,697 தொகையில் கிழக்கு மாகாண திறைசேரியினால் நிர்வாக செலவுகளுக்கென அறவிடப்பட்ட 1% சதவீதமான ரூபா 75,237 தொகை, மட்டக்களப்பு மற்றும் கல்முனையில் அமைந்துள்ள மாவட்ட உதவி காணிப் பதிவாளர் நாயகத்திற்கு செலுத்திய தொகை என்பவை செலுத்தப்பட்டதாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | மொத்தமாக உழைத்த வருமானம் மற்றும் அது தொடர்பான செலவுகள் ஒப்பிடப்பட்டு இலாபம் கணிப்பிடல் வேண்டும். | முத்திரைத் தீர்வைக்காக மாகாணத் திறைசேரியினால் அறவிடப்பட்ட மற்றும் மட்டக்களப்பு, கல்முனை ஆகிய மாவட்ட உதவி காணிப்பதிவாளர் நாயகத்திற்கு செலுத்திய தொகை தவறுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) சபைக்கு சொந்தமான 10 காணிகள் பாரதீனப்படுத்துவதற்காக நில அளவை திணைக்களத்தினால் அளவு செய்தமைக்கான நில அளவைக் கட்டணம் ரூபா 745,954 தொகை நிதிக்கூற்றுக்களில் ஆக்கப் பொருள் செலவில் காட்டப்பட்டிருந்தது. | நில அளவைக் கட்டணம் என்பது நிலம் தொடர்பான ஒரு மூலதன செலவாகும். அதனை நிதிக்கூற்றுக்களில் காணிச் செலவில் காட்டியிருத்தல் வேண்டும் அல்லது தொங்கல் கணக்கில் இடப்பட்டு காணி சபைக்கு சொந்தமான பின் காணிக் கணக்கிற்கு மாற்றியிருத்தல் வேண்டும். | காணிகளை பாராதீனப்படுத்துவதற்காக நில அளவைக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட ரூபா 745,954 இனிவருங்காலங்களில் காணி கட்டிடங்கள் கணக்கில் காட்டப்படும். |

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **செலுத்த வேண்டிய கணக்குகள்**<br>செலவுக்கடன் வழங்குனர் ரூபா 143,847 தொகை இதுவரை காலமும் சீர்செய்யப்படாது 7 வருடங்களுக்கு மேலாக செலவுக் கடன் வழங்குனரில் காட்டப்பட்டு வருகின்றது. | செலவுகடன் வழங்குனரில் காட்டப்படும் தொகை எதிர்வரும் வருடத்தில் சீராக்கம் செய்யப்படுதல் வேண்டும். | செலவுக்கடன் வழங்குனர் கணக்கில் காட்டப்பட்டுள்ள ரூபா 143,847 தொகை சபையில் தீர்மானத்தை மேற்கொண்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 1.3.3 ஆவணச்சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 221,494,485 தொகை பெறுமதியான 05 விடயங்களுக்கு காணி உறுதிகள், நிலையான சொத்து பதிவேடுகள், உரிமைப்பத்திரங்கள், மற்றும் மதிப்பிட்டு அறிக்கைகள் போன்ற சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், ஏடுகளில் பதிவதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள காணிகள் கட்டிடங்களுக்கு பாராதீனப்படுத்துவதற்கு பிரதேச செயலாளர் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்றும் பொறி இயந்திரம் மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்களும் உள்ளது. பிரதி இணைக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்காலத்தில் சொத்துப்பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள்,விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்க அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | வாகனங்களுக்கான எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்க லில்லை. | வாகனங்களுக்கான எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும். | வாகனங்களுக்கு எரிபொருளை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபையில் பணியாற்றும் ஆளணியினருக்கான மனித வளத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | பணியாற்றும் ஆளணியினருக்கு மனித வளத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். | பணியாற்றும் ஆளணியினருக்கு மனித வளத்திட்டம் ஒன்று தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2 நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,196,766 ஆக இருந்ததுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 78,699 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான முகாமைத்துவம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,100,000 | - | 10,450 | - | 1,100,000 | -- | -- | -- |
| வாடகைகள் | 3,930,000 | 3,217,431 | 3,132,831 | 84,600 | 3,981,165 | 2,860,791 | 2,852,381 | 50,500 |
| அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,000,000 | 1,707,506 | 1,707,506 | - | 2,400,000 | 985,095 | 985,095 | -- |
| ஏனைய வருமானம் | 11,370,000 | 12,339,118 | 12,340,587 | - | 11,325,000 | 6,075,197 | 6,076,148 | 17,898 |
| மொத்தம் | **18,400,000** | **17,264,035** | **17,191,374** | **84,600** | **18,806,165** | **9,921,083** | **9,886,624** | **68,398** |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் மீராய்லாண்டிள் புதிய வருமான மூலங்கள் கண்டரிந்து வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான மூலங்கள் அதிகலவிள் கானப்பட்டாலும் அவற்றை கண்டரிந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படடிருத்தல் வேண்டும். | 2020 ஆண்டு புதிய வருமான மூலங்கலை கண்டரிந்து வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 சோலைவரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உபவிதிகள் உருவாக்கப்பட்டு சோலைவரி அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதிகள் உருவாக்கப்பட்டு சோலைவரி அறவிடப்பட வேண்டும். | சோலைவரி சேகரிப்பதற்கான விபரங்கள் தற்போது சேகரிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. அவற்றை பூர்த்தி செய்த உடண் முலுமையாக அரவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 முத்திரைத் தீர்வைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமி ருந்து | கடந்த மற்றும் மீளாய்வாண்டு | 2018 ஜீலை தொடக்கம் டிசம்பர் 31ம் திகதி மற்றும் 2019ம் |

| | | |
|---|---|---|
| 2019 ஜுன் 30 இல் உள்ளவாறு ரூபா 6,986,412 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. 2018 ஜுலை தொடக்கம் திசெம்பர் 31ஆம் திகதி மற்றும் 2019 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய முத்திரைத் தீர்வைகள் பிரதேச சபையினால் கணக்கிடப்பட்டு பதிவாளர் நாயகத்திடமிருந்து உரிய காலத்திற்குள் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமானங்கள் உரிய வருடங்களில் அறவிடப்படடிருத்தல் வேண்டும். | ஆண்டு ஜனவரி தொடக்கம் ஜீன் 30ம் திகதி வரை முத்திரைத்தீர்வை கணிப்பிட்டு மாகாண இறைவரித்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. |

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிராமை<br>சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 25 செயற்பாடுகளில் 05 செயற்பாடுகள் மாத்திரம் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருந்தது ஏனைய செயற்பாடுகள் சபையின் பரிந்துரைக்கமைய, மாற்றப்பட்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் மக்களுக்கு தேவையென அடையாளப்படுத்தப்பட்டு முன்மொழியப்பட்ட 20 செயற்திட்டங்கள் செயற்படுத்த முடியாதிருந்தது. | மக்களுக்கு தேவையென அடையாளப்படுத்தப்பட்டு முன்மொழியப்பட்ட செயற்திட்டங்கள் செயற்படுத்த ப்பட்டிருத்தல் வேண்டும். | சபைநிதி மற்றும் கிழக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை,திட்டநிதி என்பனவற்றினால் செயற்படுத்தப்படவிருந்த 21 செயற்பாடுகளில் சபை வருமானம் போதாமையினாலும், குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை குறைவாக கிடைக்கப்பட்டதனாலும் 16 திட்டங்களை செயற்படுத்த முடியாமல் போய்விட்டது. |
| (ஆ) நோக்கங்களிலிருந்து விலகிய செயற்பாடு<br>மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானிய (PSDG) நிதித் திட்டத்தின் கீழ் 2016 நொவம்பர் 27 இல் ரூபா 1,822,222 செலவில விவேகானந்தபுரத்தில் வேலிகள் அமைக்கப்பட்டு திண்மக் கழிவுகள் சேகரிப்புக்காக தயார் செய்திருந்தது. எனினும் யானைகள் நடமாட்டத்தின் காரணமாக அங்கு அமைக்கப்பட்டுள்ள வேலிகள் சேதமாக்கப்பட்டு காணப்பட்டது. | செயற்திட்டம் ஒன்றைத் தெரிவு செய்யும்போது அதன் சாத்தியம் பற்றியும் மக்களின் ஒத்துழைப்பு பற்றியும் கவனமெடுத்து தெரிவு செய்தல் வேண்டும். அல்லாவிடின் அதனை மாற்றுவழிகளில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருத்தல் வேண்டும். | எமது சபைக்குரிய திண்மக்கழிவு செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்ட விவேகானந்தபுரம் என்னும் கிராமத்திலுள்ள இடத்தில் வசிக்கும் மக்களினால் ஏற்பட்ட எதிர்ப்பையடுத்து பிரதேச செயலாளரிடம் கோரியதற்கு அமைய 07 ஏக்கர் காணி எமக்கு ஒதுக்கப்பட்டு அவ்விடத்தில் திண்மக்கழிவு சேகரிக்கப்படுகின்றது. ஏற்கனவே ஒதுக்கப்பட்ட இடத்தில் சேதனப்பசளை தயாரிப்பதற்கு |

| | | |
|---|---|---|
| இவ்வாறு யானைகள் அச்சுறுத்தல் காணப்பட்டும் அதனை பொருட்படுத்தாது அவ்விடத்தில் மீளாய்வாண்டில் இரண்டாம் தர சுகாதாரச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 347,342 செலவில் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு மொத்தமாக ரூபா 2,169,564 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் எதுவித பயன்பாடுமின்றி எதிர்பார்த்த நோக்கத்தினை அடைய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ஏதுவாக இவ்விடத்தில் அதற்குரிய முன்னோக்கமாக ரூபா 2169564 இற்குரிய சேவைகள் முடிவடைந்துள்ளன. இனிவரும் ஒதுக்கீட்டிலிருந்து சேதனப்பசளை தயாரிப்பதற்கான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு சேதனப்பசளை தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (இ) செயற்பாடுகளின் தாமதங்கள்<br>---------------------------------------------- | | |
| தயட்ட கிருள தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் ரூபா 7,232,236 தொகை மதிப்பீட்டில் சபையின் எல்லைக்குட்பட்ட சின்னவத்தைக் கிராமத்தில் பொது நூலக மாடிக்கட்டிடம் அமைப்பதற்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் ஒப்பந்தக்காரர் ஒருவருடன் 2013 ஜனவரி 31 இல் ஒப்பந்தம் செய்யப்பட்டு 2013 மே 31 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தும் சபையின் வினைத்திறனற்ற செயற்பாடு கராணமாக ரூபா 1,935,449 தொகைக்கான வேலை மாத்திரமே முடிக்கப்பட்டிருந்ததுடன் கடந்த மற்றும் 2018 ஆம் ஆண்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் (PSDG), பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நன்கொடை (CBG), மற்றும் சபை நிதி முலம் மொத்தமாக ரூபா 1,021,476 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் இவ் நூலகக்கட்டிடத்தினை பூர்த்தி செய்து மக்களின் பாவனைக்கு வழங்காமல் 07 வருடங்களாக விளைவற்றுக்காணப்படுகின்றது. | நூலகக்கட்டிடத்தினை பூர்த்தி செய்து மக்களின் பாவனைக்கு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். | சின்னவத்தை கிராமத்திலுள்ள பொதுநூலக மாடிக்கட்டிடம் சுற்று வேலி தவிர்ந்த வேலைகள் முடிவடைந்துள்ளது. எனினும் நாட்டின் அசாதாரண சூழ்நிலையினால் திறக்க முடியாமல் உள்ளது.இது மிக விரைவாக திறக்கப்படும். |
| (ஈ) வலுவூட்டல் வேலைத்திட்டம்.<br>-------------------------------------------- | | |
| வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் வேலைத்திட்டங்களுக்கான வேலைகள் முடிவுற்றதாக அறிக்கை சமர்ப்பித்து 2017 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்ட தொகையில் ரூபா 1,194,352 | வலுவூட்டல் வேலைத்திட்டங்கள் குறித்த வருடங்களில் நிறைவடைந்திருத்தல் வேண்டும். | வேலைத்திட்டங்களுக்காக வைப்புச்செய்யப்பட்ட தொகையினை இவ்வருடம் செலவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| | | |
|---|---|---|
| தொகைக்கான வேலைத்திட்டங்கள் 2020 ஏப்ரல் 29 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |

(உ)நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி மூலம் அடைந்துக் கொல்லலேண்டிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குரிய குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வேற்றிடங்கள் மற்றும் மிகைகள் | | |
| i. 06 பதவிகளுக்கு 11 வெற்றிடங்கள் கானப்பட்டன. | வெற்றிடம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | எமது சபையில் நிலவும் ஆளணிப்பற்றாக்குறை தொடர்பாக பலமுறை உரிய திணைக்களங்களுக்கும் கோரிக்கை விடுத்தும் நிரப்புப்படாமல் உள்ளது. |
| ii. சபைக்குச் சொந்தமான 15 வாகனங்களுக்காக அனுமதிக்கப்பட்ட சாரதிகள் 06 ஆகக் காணப்பட்ட போதிலும் மூன்று சாரதிகள் மற்றும் கானப்பட்டதுடன் வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிக ஆளணிகள் தொடர்பில் சபையினால் கவனம் செலுத்தப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். | எமது சபையில் நிலவும் ஆளணிப்பற்றாக்குறை தொடர்பாக பலமுறை உரிய திணைக்களங்களுக்கும் கோரிக்கை விடுத்தும் நிரப்புப்படாமல் உள்ளது. |

### 3.3 பெறுகை

**பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் ஒரு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சபையினால் ஒரு பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். | பெறுகைத் திட்டமானது எதிர்வரும் காலத்தில் தயாரிக்கப்படும். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் நடைபெற்றிருக்க வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது |